**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.6/2021**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 முருகன், வயது 54, த/பெ கோவிந்தராஜ்**

**நேரம் - 12.30**

**குறுக்கு விசாரணை**

வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள தாவா 'அ' அட்டவணை சொத்து என்னுடைய சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் அது வேறு சொத்தாகும். சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.274/4 மற்றும் சர்வே எண்.273/2 ஆகிய 2 சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டதா அல்லது பூர்வீக சொத்தா என்றால் பூர்வீக சொத்தாகும்.

2. எவ்வாறு பூர்வீக சொத்தாக எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் என் பாட்டனார் சம்பாதித்த சொத்தாகும். என் பாட்டனாருக்கு என் தந்தை மட்டும் வாரிசா அல்லது வேறு வாரிசுதாரர்கள் உள்ளார்களா என்றால் கோவிந்தராஜ், பெருமாள், சுப்பிரமணி ஆகியோர் வாரிசுதாரர்கள். இவர்களை தவிர்த்து வேறு யாரேனும் உள்ளார்களா என்றால் 3 பெண் வாரிசுதாரர்கள் உள்ளனர். மேற்படி 3 பெண் வாரிசுதாரர்களை குறிப்பிட்டு தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என் தந்தைக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்றால் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது.

3. பாகப்பிரிவினையில் பெண் வாரிசுகளுக்கு பாகம் கொடுத்தோமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 முதல் 14 வரையான ஆவணங்களில் எது பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சாட்சி ஆவணங்களை சரி பார்த்து விட்டு அந்த காலத்தில் ஏது பாகப்பிரிவினை பத்திரம், மற்றும் குலுக்கல் முறையில் 3 சீட்டுகள் எழுதி போடப்பட்டு அதில் ஒருவருக்கொருவர் சீட்டு எடுக்கும்

சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது. நான் பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி குலுக்கல் முறையில் என் தந்தைக்கு என்ன சொத்து மற்றும் இருவருக்கு என்னென்ன சொத்துக்கள் வந்தது என்றால் சர்வே எண்.273/2, 274/4, கிணறு, சொத்தின் சர்வே எண்கள் எனக்கு சரியாக தெரியவில்லை, ஆனால் சொத்து சென்னானந்தல் கிராமத்தில் 4 ஏக்கர் உள்ளது என்று கூறினார், **சாட்சி தன்னிச்சையாக எனக்கு மட்டும் 4 ஏக்கர் உள்ளதாக கூறினார்.** மேற்படி குலுக்கல் சீட்டு படி சொத்து பெற்ற விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை மற்றும் தாய் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை.

5. என் தந்தை இறக்கும் சமயத்தில் பாகப்பிரிவினை ஆவணம் ஏதேனும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என் தந்தைக்கு நான் மட்டும் வாரிசா என்றால் என்னுடன் பிறந்தவர்கள் 2 அக்கா மற்றும் 2 தங்கைகள் உள்ளனர். என் தந்தைக்கு குலுக்கல் முறையில் பாத்தியப்பட்ட சொத்தை அவர் இறந்த பிறகு நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என் தந்தை எந்த ஆவணத்தையும் ஏற்படுத்தாமல் இறந்ததால் அவர் சொத்தில் வாரிசுதாரர்களுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். என் தந்தை வாரிசுதாரர்களை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் என் 2 அக்கா, 2 தங்கைகள் பற்றிய விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. என்னிடம் காண்பிக்கப்படும் தாவா வாதுரையில் எந்த இடத்தில் நான் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளனே் என்றால் சாட்சி தாவா வாதுரையை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார். அதேப் போல் என் தந்தை கோவிந்தராஜுக்கு ஒரே வாரிசாக உள்ளேன் என்று குறிப்பிட்டு வாதுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி தாவா வாதுரையை பார்த்து விட்டு ஆண் வாரிசு நான் மட்டும்தான் என்று குறிப்பிட்டுள்ளதாக கூறினார். ஆகையால் தாவா சொத்தில் மற்ற வாரிசுதாரர்களுக்கும் உரிமை உண்டு, எனக்கு மட்டும் தனி உரிமை கோர முடியாது என்றால் கேட்டால் சொத்தை கொடுத்துதான் ஆக வேண்டும் என்று கூறினார்.

நான் என் தந்தை கோவிந்தராஜுக்கு ஒரே வாரிசு என்று குறிப்பிட்டு இவ்வழக்கை தவறான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்பதால் இவ்வழக்கில் தீர்ப்பு பெறப்பட்டு மற்ற வாரிசுதாரர்களை ஏமாற்றும் நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் மற்ற வாரிசுதாரர்களை சேர்க்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எப்போது வாரிசுதாரர்களை சேர்க்க உள்ளேன் என்றால் அவர்களை கேட்டு பின்னர் சேர்க்கிறேன்.

**குறிப்பு -பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி தாவாவில் மற்ற வாரிசுதாரர்களை சேர்க்க தயாராக உள்ளேன் என்று கூறியதால் தொடர் நடவடிக்கைக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுகிறது.**

**நேரம் - 1.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni